மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டு விவசாயத் தொழிலாளர்கள் உற்சாகமாக இல்லையென்று சொன்னார்கள், உற்சாகமாகத்தான் இருக்கிறார்கள். தக்க விலை கொடுக்கப்படுகிறது.

டான்சி தயாரிக்கும் பொருட்களின் விலை

வினா எண். 85— திரு. எம். சின்னசாமி. மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டான்சி தயாரிக்கும் பொருட்களின் விலை வெளியிலுள்ள தனியார் நிறுவனங்கள் தயாரிக்கும் பொருட்களின் விலையைக் காட்டிலும் அதிகமாக இருப்பது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அரசு என்ன நடவடிக்கை எடுக்க உள்ளது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:

(அ) டான்சி தயாரிக்கும் பொருட்களின் விலை தனியார் நிறுவனங்கள் தயாரிக்கும் அதேயளவு தரமான பொருட்களின் விலையை விட அதிகமாக இல்லை. காலணிகளைப் பொருத்த வரை முக்கிய தனியார் நிறுவனங்களின் பொருட்களைவிட டான்சி பொருட்களின்விலை குறைவாகவே உள்ளன. மரம், எஃகு ஆகியவைகளிலான மேசை நாற்காலிகள், நிலையறைப்பெட்டிகள், (cubboards) போன்ற பல்வகைத் துணைப் பொருட்களைப் பொருத்த வரை, தனியார் நிறுவனங்களின் அதேயளவு தரமுள்ள பொருள்களின் விலைகளோடு ஏறத்தாழ ஒத்தேயிருக்கின்றன. ஆயத் தீர்வுக்குட்படாத சிறு தொழில்கள் தயாரிக்கும் பொருட்களின் விலை மற்றும் தரமுள்ள மூலப்பொருட்களை கொண்டு செய்யப் படாத சில தனியார் நிறுவனங்களின் பொருட்களின் விலை டான்சி பொருட்களின் விலையைவிட குறைந்திருக்கலாம், ஆனால் அவைகளை மட்டும் ஒத்துப்பார்ப்பது சரியாகாது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என் எஸ். வி. சித்தன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்க அலுவலகங்களிலேயும் இன்னும் அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனங்களிலேயும் இப்படி பொருள்கள் வாங்குகின்ற நேரத்திலே, டான்சியிலே வாங்குவதற்குப் பதிலாக தனியார் நிறுவனங்களிடம் வாங்குவதாலே அவர்களுக்குச் சில சலுகைகள் இருக்கலாம். ஆனால், டான்சியிலே வாங்கினால், டர்ன் ஓவர் அதிகமாகி, அதனாலே விலை குறைய வாய்ப்பிருக்கிறது. ஆகவே இம்மாதிரி அரசாங்க நிறுவனங்களெல்லாம், டான்சியிலேதான் வாங்க வேண்டும், வெளியிலே வாங்கக்கூடாது என்ற தடையை அரசாங்கம் விதிக்குமா? அதன் மூலமாக, நிறைய பொருட்கள் வாங்கப்பட்டால், விலை குறைய வாய்ப்பிருக்குமே, மேலும் விலையைக் குறைக்கலாமே, அதை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1983 பிப்ரவரி]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்பொழுதும் அந்த நடைமுறை தான் இருக்கிறது. மீண்டும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய ஆலோசனையை ஏற்று, அந்த கட்டாயப்படுத்தப்படும். வற்புறுத்தப்படும்.

திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டான்சி வார்பட தொழிற்சாலையிலே உற்பத்தி செய்கிற இரும்பு பைப்புகள் அதிகவிலை உள்ளதாக இருக்கிறது அதனால் குடிநீர் வடிகால் வாரியமும், வீட்டு வசதி வாரியமும், அங்கே வாங்காமல் வெளியிலே வாங்குகிறார்கள் என்று சொல்லப் படுகிறது. அப்படி இருந்தால், அதை நீக்குவதற்கு அந்த நிறுவனத்திடமே வாங்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10—10)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, அது பற்றிய தகவல் என்னிடத்திலே இல்லை. மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வினைப் பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்— விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் விடுதியில் மின்தூக்கி, தொலைபேசி, சரிவர இயங்காமை.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவை தலைவரவர்களே சட்டமன்ற உறுப்பினர்களுக்கான இரண்டு முக்கியமான பிரச்சனைகளைப் பற்றித் தங்களுடைய கவனத்திற்கு கொண்டு வர நான் விரும்புகிறேன். தற்போது சென்னையிலே உள்ள ஆறு மாடி சட்ட மன்ற உறுப்பினர் விடுதியிலே 6 லிப்ட்டுகள் உள்ளன. ஆனால் அதில் இரண்டு லிப்ட்டுகள் எப்போதும் நிரந்தரமாக இயங்குவதில்லை. மீதி உள்ள 4 லிப்ட்டுகளில் கூட இப்போது ஒரே ஒரு லிப்ட்டு தான் இயங்குகிறது. எங்களைப் போன்ற இளைஞர்கள் ஐந்து ஆறு மாடிகளில் ஏறிச் செல்வதில் பிரச்னை இல்லை. ஆனால் வயதான சட்டமன்ற உறுப்பினர்களும், மற்றும் பார்க்க வருகிறவர்களும் ஐந்தாறு மாடிகள் ஏறி வருவது என்பது சிரமமாக இருக்கிறது. எனவே, அந்த லிப்ட்டுகள் சீக்கிரமாக இயங்குவதற்கு வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்த பிரச்னை, இதில் கட்சி வேறுபாடு இருக்காது என்றே கருதுகிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் உள்ள தொலை பேசி நிரந்தர நோயாளியாகவே இருக்கிறது.